விடுதலைப் புலிகளை இலங்கை அரசு முழுமையாக தோற்கடித்து விட்டது. இப்போது விடுதலைப் புலிகள் என்று யாரும் கிடையாது.

ஆனால், ‘சருகுப்புலிகளை’ நடமாட விட்டுள்ளது இலங்கை அரசு” என்று கூறியுள்ளார்,இலங்கை வடக்கு மாகாண அமைச்சர் ஐங்கரநேசன்.

“இன்னமும் விடுதலைப் புலிகள் உள்ளார்கள் என்று வெளிநாடுகளுக்கு காட்டுவதற்காக, தம் வசம் உள்ள சில சருகுப்புலிகளை, விடுதலைப் புலிகளாக நடமாடவிட்டு, நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது இலங்கை அரசு” என்றும் கூறியுள்ளார், முன்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வடக்கு மாகாண சபையில் விவசாய அமைச்சராக உள்ள பொ.ஐங்கரநேசன்.

என்னது? விடுதலைப் புலிகள் இல்லையா?

அப்போ, வெளிநாடுகளில் உள்ள நெடியவன் படையணி, விநாயகம் அணி, இன்னும் பெயர் தெரியாத அணிகள் எல்லாம், ‘சருகுப்புலிகள்’ என்றா சொல்கிறார் இவர்?

இந்த விவசாயத்துறை அமைச்சர் ஐரோப்பா பக்கம் போனால், இவரையே உரமாக்கி விவசாயம் செய்து விடுவார்களே அங்குள்ள வீர வேங்கைகள்!

